**ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி செயற்திட்டம் - 2018**

---

ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 ஒக்தோபர் 23 ஆந் திகதிய 5678 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் சீ(3) ஆம் உறுப்புரை பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மற்றும் வரண்ட வலய அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்படுத்தல் முகவராகக் காணப்படுகின்றது. ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்திச் செயற்திட்ட சேவைகளின் தரத்தினை உயர்த்துவதற்கான சமமான அணுகுமுறையை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,250 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 50 மில்லியனாகக் காணப்பட்டதுடன், ஒட்டுமொத்த தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் நிதியளிப்புச் செய்யப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளினை 2016 பெப்ரவரி 16 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றுக்களினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

**1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

**3.** **பௌதீக செயலாற்றல்**

---

**3.1** **செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்**

---

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி சேவைகளின் வழங்குகையினை விரிவாக்கஞ் செய்தல் மற்றும் வலுப்படுத்தல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு என்ற பெயரைக்கொண்ட 2 மூலக்கூறுகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **மூலக்கூறு** | **செயற்பாடு** | **2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | **தாக்கம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|---|---|---|
| | | **எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள்** | **அடையப் பெற்ற செயலாற்றல் அலகுகள்** | | | |
| ஆரம்ப பிள்ளைப் பராய அபிவிருத்தி சேவைகளின் வழங்குகை யினை விரிவாக்கஞ் செய்தல் மற்றும் வலுப்படுத்தல். | புதிய சீடீசீஎஸ் இன் மாற்றீடு | 28 நிலையங்கள் | - | கிரயம் அதிகரிப்பதற்கு மற்றும் செயற்திட்டத்தின் காலப்பகுதி நீடிப்புச் செய்யப்படுகின்ற சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றமை. | பெறுகை நிபுணர் மற்றும் பொறியியலாளர் ஒருவரின் பதவிகள் தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்படுகின்றமை. | செயற்திட்டத்தின் நோக்கங்களினை அடைந்து கொள்ளல் மற்றும் அக்கறை கொண்டவர்களுக்காக திட்டமிடப்பட்ட நலன்களினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளினைப் பின்பற்றி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| | சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் புனரமைப்பு | 35 நிலையங்கள் | 15 நிலையங்கள் | - மேற்படி - | ஒப்பந்தகாரரினால் இலக்குகளினை அடைந்து கொள்வதில் தாமதங்கள் | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | காரணமாக | |
| புதிய விளையாட்டுப் பகுதியின் நிர்மாணம் | 35 நிலையங்கள் | 26 நிலையங்கள் | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| தற்போது காணப்படும் விளையாட்டு பகுதியை மேம்படுத்தல் | 45 நிலையங்கள் | 31 நிலையங்கள் | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| தொண்டு செய்யப்படாத / குறைவாக பிரதேசங்களில் புதிய ஈசீடீ நிலையங்களினை ஸ்தாபித்தல் | 25 நிலையங்கள் | - | - மேற்படி - | காணிகளின் கொள்வனவில் தாமதங்கள் காரணமாக | மாகாண உள்ளூராட்சி சபைகளுடன் முறையான ஒருங்கிணைப்பை பேணுதல் வேண்டும். |
| மாற்றம் தொடர்பில் ஆரம்ப பாடசாலை ஆசிரியர் களுக்கான அறிமுக நிகழ்ச்சித்திட்டம் | 6 நிகழ்ச்சித் திட்டங்கள் | - | - மேற்படி - | ஏனைய நிறுவனங்களுடனான முறையான ஒருங்கிணைப்பின் பற்றாக்குறை | தொடர்புடைய முகவர்களுடன் ஒருங்கிணைப்புக்களினை பேண வேண்டும். |
| மாகாண ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி நிலையங்களின் ஒருங்கிணைப்பு முறைமை | 9 மாகாணங்கள் | - | செயற்திட்டத்தின் நோக்கங்கள் அடைந்து கொள்ளப்படவில்லை. | செயற்பாடு சிக்கலான தன்மை காரணமாக காணப்படுகின்றதுடன் அனுபவம் வாய்ந்த | செயற்திட்டத்தின் நோக்கங்களினை அடைந்து கொள்ளும் பொருட்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஆலோசனையாளரொருவரை ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டும். | இலக்குகளுடன் இணங்கியதாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| வசதி முன்னேற்ற மானியம் | 1,500 நிலையங்கள் | 259 | - மேற்படி - | நிர்வாக நடைமுறைகளினைப் பின்பற்றுவதில் தாமதங்கள் ஏற்பட்டமை காரணமாக | - மேற்படி - |
| பெற்றோர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் | 600 நிகழ்ச்சித் திட்டங்கள் | 350 | - மேற்படி - | மூன்றாம் தரப்பினர்களின் மந்தமான தேவைப்படும் பங்குபற்றலின் காரணமாக | அக்கறையுடையோர்களுக்காக குறித்துரைக்கப்பட்ட நலன்களினைப் பெற்றுக் கொள்வதற்கு குறித்துரைக்கப்பட்ட இலக்குகளுடன் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| சிறுவர் மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் | 3,000 நிகழ்ச்சித் திட்டங்கள் | 116 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |